ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2342/18 – 2023 ජූලි මස 25 වැනි අඟහරුවාදා – 2023.07.25
2342/18 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2021.11.19 ஆந் திகதிய 2254/40 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 235 ஆம் இலக்க 2021.11.19 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2021.11.19 ஆந் திகதிய 2254/40 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 235 ஆம் இலக்க 2021.11.19 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல.: 4-3/ 8/ 2020 UDA/ 252.
பிர. செய. இல. : WEG/LAN/L/19/ACQ/66.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, யூன் 21.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் வெலிகம கோறளே சிறு பிரிவில் கலட்டியாவல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2021.07.20 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு வரைபடத்தில் MA/WLG/2021/106 இன் துண்டு A இல் பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

01. **துண்டு 'A' - பிஸ்ஸவ்லவத்தை - விஸ்தீரணம் : 2.0390 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) க.தி. 820068 வலயம் 1 துண்டு இல. 72, 74,75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89 மற்றும் 90; கிழக்கு: எம். கே. உதயபால மற்றும் எஸ். விதானகமாச்சி உரிமை கோரும் பிஸ்ஸவ்லவத்தை; தெற்கு: க. தி. 820068 வலயம் 1 துண்டு இல. 128, 127 மற்றும் 125; மேற்கு: க. தி. 820068 வலயம் 1 துண்டு இல. 128, 127 மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை).

EOG 07 - 0233